திரு. மு. மாசிலாமணி : பின்தங்கியோர் நலனில் அக்கறை செலுத்தி அவர்களுக்குப் பல நன்மைகளைச் செய்வதற்காக முந்தைய அரசு ஒரு ஆலோசனைக் குழுவை நியமித்து செயலாற்றி வந்தது. அந்தக் குழு இப்போது நடைபெறவில்லை. அக்குழு எந்த இடத்தில், எந்த ஆண்டு, எந்தத் தேதியில் இறுதியாகக் கலைக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 1974 ஆம் ஆண்டுக்கு முன்னர் செயல்பட்டு வந்த அந்த ஆலோசனைக் குழு, கடைசியாக திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள குற்றாலத்தில் 22-7-1974 அன்று கூடியது. அதற்குப் பிறகு அந்தக் குழு இன்னும் திருத்தியமைக்கப்படவில்லை.

திரு. மு. மாசிலாமணி : அந்தக் குழுவினுடைய அமைப்பில் கிட்டத்தட்ட 169 பின்தங்கிய சமுதாயத்தினரை உள்ளடக்கி அரசு கெஜட்டில் பதிவாக்கப் பட்டிருக்கிறது. அதனுடைய நலனைக் கருத்திற் கொண்டு சட்டநாதன் தலைமையில் அமைந்த குழுவின் பரிந்துரையை அமுல் செய்ய அந்தக் குழு ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தது. அந்தப் பரிந்துரைகளை மீண்டும் செயல்பட வைக்குமா இந்த அரசு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : சட்டநாதன் அவர்களுடைய பரிந்துரையை அரசு தீவிரமாகப் பரிசிலனை செய்து, அவற்றில் சிலவற்றை நடைமுறைப் படுத்தியிருக்கிறது. அகில இந்திய அளவிலே பின்தங்கிய மக்களின் நலனுக்காக இப்போது மத்திய அரசு ஒரு கமிஷனை நியமித்திருக் கிறது. பின்தங்கியோர்களுக்குப் பொருளாதார வகைகளையும், இதர நிலைமைகளையும் சீர்படுத்துவதற்காக உள்ள ஒரு நல்ல வாய்ப்பு அதிலே இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த அமைப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

Laws for Uplift of Women.

*139 Q.—Thiru ARCOT N. VEERASAMI (on behalf of Thiru V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether the Central Government have requested the State Government to enact laws for the uplift of women;

(*b*) whether the Central Government have made any recommendations in this regard;

(*c*) if so, the details thereof; and

(*d*) the manner in which the State Government propose to implement the request of the Central Government?

1978 பிப்ரவரி 25]

பெண்களின் முன்னேற்றத்திற்கான சட்டங்கள்

திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பெண்களின் முன்னேற்றத்திற்கான சட்டங்கள் இயற்றும்படி மத்திய அரசு, மாநில அரசைக் கேட்டுக்கொண்டுள்ளதா ?

(இ) மத்திய அரசு ஏதாவது பரிந்துரைகள் செய்துள்ளதா ?

(உ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

(எ) மத்திய அரசின் வேண்டுகோளை மாநில அரசு எந்த முறையில் நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ), (இ) & (உ) இல்லை.

(எ) ஆனால் மத்திய அரசு திட்டங்கள் இயற்ற பரிந்துரை செய்துள்ளது. மத்தியக்கல்வி மற்றும் சமூக நல அமைச்சகம் தேசிய அளவில் பெண்கள் முன்னேற்றத்திற்கான திட்டங்களை நிறைவேற்ற, தலைமை அமைச்சரின் தலைமையிலும் மத்திய கல்வி அமைச்சரின் துணைத்தலைமையிலும் மத்திய அரசுக்கு ஆலோசனை வழங்கும் வகையில் பெண்களுக்கான தேசியக்குழு நிறுவப்பட்டுள்ளது என்றும் இது போன்ற குழுக்களை, மாநில அளவிலும் அமைக்க வேண்டுமென்றும் ஆலோசனை கூறியது. மத்திய அரசின் வேண்டுகோளை மாநில அரசு ஏற்று மாநில அளவில் சமூக நல அமைச்சரின் தலைமையில் ஒரு குழுவினை அமைத்துள்ளது. இம்மாநிலக் குழுவின் பரிந்துரையின் பேரில், மாநில அரசு தக்க நடவடிக்கை எடுக்கும். நிதிநிலையைப் பொறுத்து திட்டங்கள் நிறைவேற்றப்படலாம்.

THIRU A. R. DAMODARAN: Sir, is there any proposal to reserve posts of teachers in Primary Schools exclusively for women in our State?

THE HON. SELVI P. T. SARASWATHI: Sir, I am afraid there is no such proposal.

திரு. க. அறிவழகன்: பெண்களின் முன்னேற்றத்திற்காக சட்டங்களை இயற்றும்படி மத்திய அரசு மாநில அரசைக் கேட்டுக்கொண்டிருந்தாலும், கேட்டுக்கொள்ளாவிட்டாலும், பெண்களின் முன்னேற்றத்திற்காக இந்த அரசின் சமூக நலத் துறையில் என்னென்ன திட்டங்களைக் கொண்டுவர இருக்கிறார்கள், என்னென்ன செய்யவிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு பரிந்துரை செய்திருப்பவைகளை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்:

(1) பணி செய்யும் மாதர்களுக்கு வேலை ஒதுக்கீடு செய்ய சட்டம் இயற்றுதல் வேண்டும்.

(2) எல்லா தொழிலாளர் இயக்கத்திலும் மாதர் பிரிவு ஏற்படுத்த வேண்டும்.

(3) துவக்கப் பள்ளி நிலையில் ஆண்களும், பெண்களும், சேர்ந்து படிக்கும் கோ-எஜுகேஷன் முறையைக் கையாள வேண்டும்.

(4) உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களில் 50 சதவிகிதம் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

(5) சட்டப்பூர்வமான பெண்கள் பஞ்சாயத்துக்கள் கிராம அளவில் நியமிக்க வேண்டும்.

(6) முக்கியமான குழுக்களில் மாதருக்கு நியமனம் அளிக்க வேண்டும்.

இவ்வாறு மத்திய அரசு பரிந்துரை செய்திருக்கிறது.

THIRU G. SWAMINATHAN: Sir, the Hon. Minister said that a Committee had been constituted. May I know the composition of the Committee and the criteria under which the Chairman and Members of the Committee are appointed?

THE HON. SELVI P. T. SARASWATHI: Sir, may I know whether the hon. Member wants to have an idea about the State Committee or about the Central Committee?

THIRU G. SWAMINATHAN: Sir, it is about the State Committee.

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி: மாநிலக் குழுவின் தலைவராக சமூக நல அமைச்சரும், உறுப்பினர் செயலாளராக சமூக நல இயக்குநரும், உறுப்பினர்களாக கீழ்க்கண்டவர்களும் இருக்கிறார்கள்:—

1. செயலாளர், சமூக நலத் துறை.

2. தலைவி, மாநில சமூக நல வாரியம்.

3. டாக்டர் திருமதி சௌந்திரம் இராமச்சந்திரன், இயக்குநர், காந்தி கிராமம், மதுரை.

4. இந்திய பல்கலைக் கழக மகளிர் கூட்டமைப்பின் உறுப்பினர்.

5. இந்திய குழந்தைகள் நலத்திற்கான குழுவின் உறுப்பினர்.

6. டாக்டர் திருமதி சரோஜினி.

7. திருமதி லில்லி தாமஸ், இளைய மகளிர் கிருத்தவ அமைப்பு.
8. திருமதி மந்தா கிருஷ்ணமூர்த்தி, எம்.எல்.சி.
9. திருமதி பங்கஜாட்சி சுப்பையன்.
10. திருமதி பவானி பழனியம்மாள்.
11. திருமதி சரஸ்வதி நாராயணசாமி.
12. திருமதி கஸ்தூரி பாலன்.
13. திருமதி ஜீன் அகஸ்டின்.

திரு. டி. சந்தோஷம்: பெண்களின் முன்னேற்றத்திற்காக திட்டம் வகுப்பது நல்லதுதான். ஆனால் அதே சமயத்தில் குடும்பங்களில் பெண்களின் சர்வாதிகாரத்திலிருந்து ஆண்களைப் பாதுகாக்க அரசு திட்டம் வகுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி: துணைத் தலைவர் அவர்களே, அவர் அவர்களாகவே வகுத்துக்கொள்ள வேண்டியதுதான்.

THIRU A. R. DAMODARAN: Sir, in the Legislative Council we have only three ladies, one nominated and two elected. The Hon. Minister also is here. In view of the fact that we are 63 Members, do the Government have any proposal to increase the Membership of this Council for women at last by two or three to give adequate representation to the fair sex, Sir?

THE HON. SELVI P. T. SARASWATHI: Sir, I am afraid I cannot answer this question.

THIRU G. SWAMINATHAN: May I know who can answer this?

(No reply.)

Sri Lanka Repatriates.

* 140 Q.—THIRU ARCOT N. VEERASAMI (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Handlooms and Textiles be pleased to state—

(*a*) whether Sri Lanka repatriates have been employed in Spinning Mills in Ramanathapuram district during the year 1977;

(*b*) if so, the number of persons employed and the names of the towns in which the Mills are situated; and

(*c*) the concessions given to them on behalf of the Government?